# ★ பொதுமக்கள் பணம் போகும் வழி ★


Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணு இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 20—12—50 | மணி 18


## தூதுக் கூட்டமனுப்ப 8 லக்ஷம் ரூ.

(0)

## ஒரு கேள்விக்குப் பதில் காண 2000 ரூ.

(0)

### அகதிகளுக்கு உதவி செய்யும் பணத்திற்கு அளவில்லை

புதுடில்லி, டிச, 19—

நம்நாட்டு நிலை நன்னிலை அடைவதற்கு நல்ல வேலைத் திட்டங்களைப் போட்டு, அவற்றினை நிறைவேற்ற வேலைசெய்தால், பலன் ஏற்படும். ரஷ்யாவைப்போல, ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து வேலை செய்தால், நாடு உயர்வுபெறும்; மக்கள் முன்னேற்றம் அடைவர்.

ஆனல், நம்நாட்டில் ஆளவந்தவர்கள் இவற்றைப்பற்றி யெல்லாம் கவலைப்படவில்லை. உல்லாச விருந்துகள் உலக மாநாடுகள், தூதுக் கோஷ்டிகள் இந்தியாவிலிருந்து உல்லாசப் பிரயாணம் செய்தல் போன்ற துறைகளில் பணம் பாழாக்கப்படுகிறது.

இந்தியா சட்டசபையில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் கூற ஆயிரக்கணக்கில் பணம் செலவாகிறதெனில் மற்றவற்றைக் குறித்து என்னென்பது?

நாட்டிலே, அணைக்கட்டுகள், நீர்ப்பாசன வேலைகள், கைத்தொழில் வளர்ச்சி போன்ற பல முக்கியமான இனங்கள் அரசாங்கத்தில் பணம் இல்லை என்னும் ஒரே காரணம் கூறி, வளர்ச்சியடைய முடியாதவாறு கிடக்கின்றன.

ஆனல் அரசாங்கம் உண்மையிலேயே பணம் செலவு செய்ய வழியில்லாமல் அவதியுறுகின்றதோ என்று பார்த்தால், அனுவசியமான துறைகளிலெல்லாம் ஏராளமான பணத்தைச்செலவுசெய்துகொண்டு தானிருக்கிறது.

இந்த ஆண்டு கடந்த எட்டு மாத காலத்தில் மட்டும் வெளிநாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்துகொள்வதற்காகச் சென்ற இந்தியத் தூதுக் கூட்டங்களுக்கென்று 8 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று மத்திய அரசாங்க நிதி மந்திரி தேஷ்முக் இந்திய பார்லிமெண்ட் சபையில் அறிவித்தார். இதற்கு முந்திய ஆண்டு இதே இனத்தில் 26½ லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறதாம்.

இவ்வளவு பணத்தை மாநாடு செல்வோருக்காக நம் நாடு செலவிட வேண்டியது அவசியந்தானு என்பது இங்குச் சிந்தித்தற்குரியதாகும். இவ்வாறு தூதுக் கூட்டங்களை அனுப்ப வேண்டியதில்லை. பொதுப் பணத்தை இவ்வாறு வீணிற் செலவிடவேண்டியதுமில்லை. இன்றியமையாத தேவையேற்பட்டால் வெளிநாட்டுத் தூதர்களையே இவற்றையெல்லாம் கவனித்துக்கொள்ளுமாறு பணித்துவிடலாம். இத்தூதர்கள் வெளிநாடுகளிலிருந்து அல்லுபகலாகஉழைத்துக்கொட்டுவது ஒன்றுமில்லையாகையால், இந்த வேலைகளையாவது அவர்கள் செய்துகொண்டிருப்பது அவர்கள் பெறும், பெறுவாரியான ஊழியத்துக்கு ஓரளவு வேலை செய்ததாகவேனும் அமையும். அப்படியில்லாமல் இங்கிருந்து தனிப் பிரதிநிதிகளைப்பெரும் செலவில் அனுப்பிவைக்க வேண்டிய தேவை என்ன வந்துவிட்டதோ என்று அறியக்கூடவில்லை.

இத்துறை மட்டுமல்ல. கேள்வி கேட்டால் விஷயம் தெரிந்தவர் உடனே பதிலளித்துவிடுவார். விஷயமறியாதவர் ரிக்கார்டுகளைப்பார்த்து இரண்டொரு நாட்களில், தவறினல் ஐந்தாறு நாட்களில் பதில் அளித்துவிடுவார். இவ்வாறின்றி, பார்லிமெண்ட் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு விடை கூற ரூபாய் 2000 செலவாயிற்

(3-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு உணவா வேண்டும்?

(:0:)

## வேண்டிய அளவு நாங்கள் தருகிறேம்

(0)

### சோவியத் ரஷ்யாவின் அன்பு

கல்கத்தா, டிச, 19—

இந்தியாவில் உணவுப் பஞ்சம் தலைவிரித் தாடுகிறதல்லவா? சென்னை மாகாணத்திற்கு 1951-ம் ஆண்டிற்கு 15 லட்சம் டன் உணவுத் தானியம் தேவைப்படுகிறது. ஆனல் சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் 7 லட்சத்து 36 ஆயிரம் டன் உணவுத் தானியம் கேட்டிருந்தது. மத்திய அராங்கம் நமக்களித்திருக்கும் "கோட்டா" 4 லட்சம் டன்களேயாகும்.

சென்னை மாகாண மந்திரி கூறுகிறர்-தம்முடைய கோரிக்கை மத்தியில் வீற்றிருக்கும் தேவதையால் நிறைவேற்றிவைக்கப்படும். எனும் நம்பிக்கை இன்னும் தம்மனத்திலிருந்து போய்விடவில்லையென்று.

சென்னைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 4 லட்சம் கோட்டாவிலும் 2½ லட்சம் டன்தான் அரிசி.

இந்த ஆண்டு (1950) மத்திய அரசாங்கம் 6 லட்சம் 2 ஆயிரம் டன் உணவுத்தானியம் நமக்கென்று கொடுத்திருக்கிறது.

இந்தியாவுக்குக் கோதுமை வேண்டி அமெரிக்காவிடம் வேண்டிக்கொண்டிருப்பதாகவும், அமெரிக்கப் பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளை அனுதாபத்துடன் கவனித்திருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

ஆனல், இந்த வேண்டுதலும் அனுதாபமுமற்ற நிலைமையில், சோவியத் ரஷ்யா நமக்குத் தேவையான அளவு கோதுமையையும், சோளத்தையும் மற்ற உணவுத் தானியங்களையும் தரத் தயாராயிருப்பதாகத் தெரிகிறது. இந்தியா கேட்கவேண்டியதுதான் தாமதம்! உடனே எந்த அளவு வேண்டுமானுலும் அனுப்பிவைக்கத் தயார் என்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. சோவியத் ரஷ்யாவில் என்றுமே உணவுப் பஞ்சம் ஏற்பட்டதில்லை. மேலும் இவ்வாண்டு அங்கு நல்லவிளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. சோவியத் ரஷ்யாவின் உணவுத் தானியங்கள் அமெரிக்க, ஆஸ்ட்ரேலியத்தானியங்களைவிட உயர்ந்த ரகம் என்றும் தெரிகிறது.

எனவே, இந்திய அரசாங்கம் இந்த நல்ல சந்தர்ப்பத்தைக் கைநழுவவிடாமல் உடனடியாக ரஷியா தரக்கூடிய உணவுத் தானியங்களை வாங்கிக்கொள்வது நலமாகும். ஆனல் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போரின் மூளையில் இதுபடுமா?

## திருக்குளப் பணிபுரிவீர்

(0)

## நகர் சுத்தமாயிருக்க திருக்குளம் சீர்படவேண்டும்

(0)

### நாட்டிலே அறிவுப் பஞ்சம்

சென்னை, டிச. 18—

உங்கள் தெருவோ, ஊரோ சுத்தமாயிருக்கிறதா? இல்லையேல் இன்றே அவ்விடத்தில் பாழடைந்துள்ள திருக்குளத்தைபழுதுபாருங்கள். அக்குளமேஅவ்விடத்தின்தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கி அழகைத்தரும். நகர் சுத்தமாக இருக்க வேண்டுமானல் அவ்வூர் கோயிலின் முன்னுள்ள திருக்குளம் ஒழுங்காக அமைந்திருக்க வேண்டும். நம் நாட்டில் அற்புத சிந்தனைச் சிற்பிகளாக அமைந்துள்ள அமைச்சர்களில்ஒருவரின் புதிய கண்டுபிடிப்பு! இதைத் துண்டுப் பிரசுரமாக அடித்து மக்களை அப்பணியில் ஈடுபட வீடாதீர்கள். எத்தனை கிராமங்களில் ஏரிகளும், கால்வாய்களும் பழுது பார்க்கப் படா

(4ம் பக்கம் பார்க்க)

# மாலைமணி

சென்னை 20—12—50 புதன்கிழமை


# பெற்றவள் :: பிச்சை எடுக்கிறாள்

“பெற்றதாய் வயிற்றுக்கில்லாமல் பிச்சை எடுக்க, பிள்ளை கும்பகோணத்தில் கோதனம் செய்கிறானாம், என்று ஒரு தொடர் மொழி கூறப்படுவதுண்டு. அதுபோல் இன்று நம் நாட்டு மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி அல்லல்பட்டுக்கொண்டு கிடப்பதைக் கவனித்து, அதற்கான பரிகாரம் செய்ய அரசாங்கத்துக்கு முடியவில்லை. ஆனால் அகதிகளுக்கு உதவி செய்வதில் நம் அரசாங்கம் முனைந்து நிற்கிறதென்றால் இதைக் கேலிக்கூத்து என்பதா? அடிமையில் மோகம் என்பதா? வட நாட்டவர்களுக்கு நம் நாட்டவரைப் பலிதரும் செயல் என்பதா?

நம் நாட்டிலே உணவில்லாமல் பட்டினியால் மாள்பவர்கள் பற்றிய செய்தி நாளுக்கு நாள் பல விடங்களிலிருந்து வரத் தொடங்கிவிட்டது. வேலை கிடைக்கவில்லை: பசி தாங்க முடியவில்லை, பிச்சை எடுத்து வயிறு வளர்க்க மனமில்லை; மானத்தைக் காத்துக்கொள்ள உயிர் விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறித் தற்கொலை செய்து கொள்பவர்களும், மனைவி மக்கள் பசியால் வாடுவதைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியாமல் உயிர் துறப்பவர்களுமாக நம் நாட்டில் செய்திகள் வரத் தொடங்கி விட்டன.

நாட்டிலே எங்குப் பார்த்தாலும் பஞ்சமும் வறுமையும் பிணியும் பெருகி, மக்கள் நிலை நாளுக்கு நாள் பிற்போக்கை நோக்கிச் சென்றவண்ணமாயிருக்கிறது. மக்கள் பசிதாளாமல் குற்றம் புரியும் நிலைமைக்கும் தாழ்ந்துவிடுகிறார்கள். மானம், கல்வி, வீறம், அந்தஸ்து முதலிய அனைத்தும் பசி வந்திடப் பறந்து போகுமல்லவா? பசியின் கொடுமைதாளாமல் உணவுப் பொருள்களைத் திருடிவிட்டுத் தண்டனை பெறுபவர்கள்பற்றிய செய்தியும் பத்திரிகைகளில் வரத் தொடங்கிவிட்டது.

நாட்டின் நிலை இவ்வாறு இருக்க, சென்னை போன்ற நகரங்களிலே, நடை பாதை ஓரங்களை நிரந்தரக் குடியிருப்புத் தலங்களாக ஆக்கிக்கொண்டு வாழும் மக்களின் தொகை அளவில்லாமலிருக்கிறது. நகரின் முக்கியமான பகுதிகளெல்லாம் இன்றைக்கும் இத்தகையகாட்சியைக் காணலாம். வெயில்காய்ந்தாலும் சரி, மழை பெய்தாலும்சரி, கடும்பனி கப்பிக் கொண்டிருந்தாலும் சரி, இந்த ஏழை மக்கள், தெரு ஓரங்களைத் தங்கள் படுக்கை இடங்களாக ஆக்கிக்கொண்டிருப்பது மிக மிகக் கொடுமையாகும். தெரு ஓரங்கள் பாழடைந்த இல்லங்களின் புறத்திண்ணை முதலிய இடங்கள் இத்தகைய மக்கள் சமைத்துண்ணும் இடங்களாகவும் காட்சியளிக்கின்றன.

இவையேயன்றி எங்கெங்குத் திறந்த வெளியிடங்கள் காணப்படுகின்றனவோ ஆங்கெல்லாம் உள்ள சேரிகளின் நிலைமையோ எடுத்தியம்ப ஒண்ணாததாகும். குடிக்கத் தண்ணீரில்லை; குளிக்க வசதியில்லை; கக்கூஸ் வசதியில்லை, தெருக்கள் அமைப்பில்லை; இரவில் விளக் கொளியில்லை. இந் நிலைமையில் மழைக் காலங்களில் தெருக்கள் ஓரே சேறும் சகதியுமாகக் குழம்பி நடக்க முடியாமலாகிவிடுகின்றன. சில சேரிகள் உண்மையில் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பவை போன்றே காணப்படுகின்றன. இவற்றால் கொசுக்கடிக்கு அம் மக்கள் ஆளாகவும் பிற நோய்களுக்கு ஆளாகவும் நேரிடுவதுடன், அப் பிணிகள் அங்கிருந்து மற்றைய விடங்களுக்கும் பரவுகின்றன.

இந்தச் சேரிகள் மழைக் காலங்களில்தான் மிக மோசமான நிலையில் இருக்கின்றன வென்பதில்லை. வெயிற் காலங்களிலும் புழுதி கிளம்பி இக்குடிசைக்குள் புகுந்து, இம் மக்கள் நடுத் தெருவில் புழுதி மண்ணில் வாழுபவர்களாகத்தான் தங்கள் வாழ் நாட்களைக் கழிக்க வேண்டியவர்களாகின்றார்கள்.

நம் நாட்டிலே, நம்மவர்களின் நிலைமை இத்துணைச் சீர்கேட்டை அடைந்திருக்கிறது. இவர்களுடைய நிலைமையைச் சீர்ப்படுத்த அரசாங்கத்தாராலும் முடியவில்லை; நகர சபையினராலும் முடியவில்லை.

... முன்னர்தான் ஆங்கிலேயர் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள் இத்தகைய ஏழைகளைப்பற்றி அவர்களுக்கு அக்கரை ஏழை வில்லை என்று கூறப்பட்டது. ஆனால் இப்போது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் குடியரசுநடத்தும் தேச பக்தர்கள் ஆயிற்றே! இவர்கள் ஆட்சிக்குவந்து இத்துணை ஆண்டுகளாகியும் இந்த ஏழைகளின் நிலையை ஓரங்குலம்கூட உயர்த்த முடியவில்லையே. ஏன் இவர்களுக்கு இந்த ஏழைகளைப்பற்றிச் சிறிதும் அக்கரையில்லை.

எனவேதான் சென்னை அரசாங்கம் இந்த ஏழைகள் பிரச்னை வரும்போதெல்லாம் கையில் பணமில்லை என்ற பேச்சுடன்முடித்து விடுகிறது. சென்னை நகர சபையோ, ஒவ்வோராண்டும் ஒரு புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவுடனே முதல் வேலையாகச் சேரியை ஒழித்துவிட்டுத்தான் மறு வேலை பார்க்கப் போவதாகச் சொல் அலங்காரமாகப் பேசுவதோடு நின்று விடுகிறது. ஒரு மேயராவது சேரி மக்களுக்கு நல்ல இடம் அமைத்துக்கொண்டு சேரி வாழ்வை அகற்ற முயன்றிருப்பதாகக்கூடத் தெரியவில்லை.

ஆனால் அதே நேரத்தில் சென்னை அரசாங்கம் பாக்கிஸ்தானிலிருந்து ஓடி வந்துவிட்ட அகதிகளுக்காக வென்று 17,700 செலவில் 40 மரக்கடைகளைக் கட்டிக்கொடுத்து; அவர்கள் தொழில் நடத்துவதற்கான உதவிசெய்ய அனுமதித்திருப்பதாக அறியக் கிடக்கிறது.

நலிந்து நைந்து கிடக்கும் நாட்டு மக்களைக் கவனிக்க அரசாங்கத்திடம் பணமில்லை. ஆனால் அகதிகளுக்குத் தொழில் நடத்த குடில்கள் கட்டித் தருவதற்குச் சென்னை அரசாங்கத்திடம் பணமிருக்கிறது.

இந்த நிலையை என்னென்பது. அகதிகளுக்குத் தொழில்நடத்த உதவி செய்வது முக்கியமா? நம் மக்கள் தெரு ஓரங்களில் பனியிலும் மழையிலும் வாடி வதங்குபவர்களுக்குக் குடிசைகளாவது கட்டித் தருவது முக்கியமா? மத்திய அரசாங்கம் இடும்ஆணைகளுக்குத் தன் மக்கள் நலனையும் பலியிட்டு இவ்வாறு பணிந்து கிடக்கும் நிலையிலா நம் அரசாங்கம் நடைபெற வேண்டும்? இத்தகைய அடிமை வாழ்வுக்கா நமக்கும் வட நாட்டுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறது!

# கிடைப்பதைச் சாப்பிட பழகிக்கொள்ளுங்கள்

—(0)—

## கிடைத்ததை சாப்பிட்டு உயிர்விட்டவர்

குடியேற்றம், டிச. 13—

“கிடைப்பதை சாப்பிடப் பழகிக்கொள்ளவேண்டும்” என சில நாட்களுக்கு முன்னால் ராஜன்பாபு அவர்கள் சொன்னார். தென்னிந்தியாவில் அதிகம் கிடைப்பது கொள்ளு, வேர்க்கடலை, பட்டாணி காசிமணி இவைகள்தான், தலைவர் சொன்னாரேஎனகாங்கிரஸ்காரர்கள் சாப்பிட்டார்களா? சந்தேகம்! இல்லைசாப்பிடவாவது நினைக்கிறார்களா? அதையறியோம். ஆனால் ஒரு நெசவாளி, தென் ஆற்காடு, மாவட்டத்தில் குடியேற்றத்தைச் சேர்ந்தவர். பெயர் முருகேசன். வேலை செய்து வாரம் 2-8-0 ரூபாய் சம்பாதித்தார். இதில் அவர் சிறிய தகப்பனார், 4-வயது 8 வயதுடைய இரண்டு பிள்ளைகள், உயிர் வாழ வேண்டும். சம்பாதிக்கப் போதியதால் சப்ளை இல்லை. ரூபாய் இரண்டரை வருவாயில் உயிர்வாழ அவர் கண்டு பிடித்தார். அதாவது ராஜன் பாபு சொன்னது அவருக்குத் தெரியாது. ‘சாதாரணமாக மனிதன் சாப்பிடக் கூடியதுதானே வேர்க்கடலை, கொள்ளு இதையே ஏன் உணவாகக் கொள்ளக்கூடாது என நினைத்தார் போலும், இந்தப் புன்செய்தானியத்தையே நாட்டின் நிலையறிந்து வாழ்க்கையை வளைத்துக்கொண்டு குழந்தைகளுக்குஊட்டினார். தானும் உண்டார். ஆனால் உடல் வளைந்து கொடுக்கவில்லை, பேதியாகி இரு குழந்தைகளும் அடுத்தடுத்து உயிர் விட்டன. இதைப் படிக்கும் காங்கிரஸ் அன்பர்கள், தலைவர் சொன்னபடிநடக்க எண்ணியிருப்பவர்கள் கூட கைவிடுவர் என்பது நமக்குத் தெரியும். ஆனால் தீவிர காங்கிரஸ்வாதிகள் ‘அவைகளைக் கூட கட்டுப்பாடு செய்து பகிர்ந்தளிக்காமல் எவ்வளவு விலையை கொடுத்தாவது வாங்கி சாப்பிடட்டும்என்று விட்டிருக்கிறோமே’ என்றமந்திரிகள் சார்பில் நம்மைக் கண்டு பெருமிதமாகச் சொன்னாலும் சொல்லலாம். வியப்பொன்றுமில்லை!

---

## டாக்டர் நோயாளி உறவு பற்றிய மாநாடு

லண்டன், டிச. 19—

டாக்டர்கள், நோயாளிகள் இவர்களிருவரும் ஒருவருக்கொருவர் எப்படி பழக வேண்டும் என்பது பற்றி விவாதித்து முடிவு செய்ய அஷ்ரிட்ஜ் என்ற இடத்தில் இவ்விரு தரப்பினரும் கொண்ட மாநாடு ஒன்று கூடவிருக்கிறது.

இந்த யோசனையை பிரிட்டிஷ் வைத்ய சங்கம் ஆதரித்திருக்கிறது.

---

## மருத்துவ உதவிகளுக்கு அணுசக்தி

லண்டன், டிச. 18—

மருத்துவச் சாதனங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்தும் அளவு இப்போது அதிகரித்திருக்கிறது.

வருஷத்திற்கு ரேடியோ ஐஸடோபஸ் 7000 உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சப்ளை மந்திரி காரியாலயம் அறிவிக்கிறது. இவை மருத்துவச் சாதனமாக உபயோகிக்கப்படுகின்றனவாம்.

பல வியாதிகளைக் குறித்து ஆராய்ச்சி நடத்தவும் அணுசக்தி பயன்படுத்தப்படுகின்றனவாம்.

## மனோவசியம் பற்றிய மர்மங்கள்

மன வியாதிகளை குணப்படுத்தும்

லண்டன், டிச. 18—

மனோவசியம் பற்றிய இரகசியங்களை பிரபல மனோவசிய நிபுணர் வார்னே-பிரெஸ்போர்ட் வெளியிட்டிருக்கிறார்.

ஒருவர் விருப்பப்படவில்லை என்றால் அவரை அவருடைய விருப்பத்திற்கு விரோதமாக மனோவசியம் செய்துவிட முடியாது. மனோவசியத்திற்கு உட்படாமல் இருக்கையில் ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்ற நோக்கம் உள்ளவரை மனோவசியம் செய்து அக்காரியத்தை செய்யும்படி தூண்ட முடியாது.

மனோவசியம் செய்பவர் வழிகாட்டுகிறார் அவ்வளவே. செய்வதெல்லாம் மனோவசியத்திற்குட்பட்டவர்கள் தான்.

மனோவசியம் எப்படி முடிகிறது? ஒரு விஷயத்தைப்பற்றி பலதடவை பேசுவதால், மனதில் அவ்விஷயம் பதிந்துபோகும்படி செய்யப்படுவதால், மனம்சம்பந்தப்பட்ட வியாதிகளை எல்லாம் மனோவசியம் மூலம் குணப்படுத்த முடியும்.

## கிருமிகளைக் கொல்லவழி

உணவுப் பொருள்களைக் கெடுக்கும் கிருமிகளைக் கொல்ல விஞ்ஞானிகள் ஒரு வழி கண்டு பிடித்துவிட்டனர்.

எலக்டிரான்களை சுடும் 'கேபாசிட்ரன்' என்ற நூதன சாதனத்தின் உதவியைக்கொண்டு இக்கிருமிகளைக் கொன்றுவிட முடியுமாம்.

எலெக்டிரானிக் ரேடியேஷனுக்கு உணவுப் பண்டங்களை உட்படுத்தினால் உணவிலுள்ள கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் எல்லாம் கொல்லப்பட்டு விடுகின்றனவாம்.

இம்மாதிரி எலெக்டிரானிக் ரேடியேஷன் செய்யப்பட்ட உணவு குளிர்பதன சாதனமில்லாமல் நீண்டகாலம் கெடாமல் வைத்துக் கொள்ள முடிகிறதாம்.

## குமாஸ்தா வேலைகளுக்கும் ஆபத்து

நியூயார்க், டிச. 18—

பாங்கியில் வரவு வைப்பது, கணக்குகள் எழுதுவது இவைகளை எல்லாம் செய்யும் ஒரு இயந்திரம் ஒரு நியூயார்க் பாங்கியில் வேலை செய்துவருகிறது.

ஒரு நிமிஷத்தில் 240 ஐடெம்களை இது பைசல் செய்கிறதாம்.

கட்டப்பட்ட செக், பணம் இவைகளைக் கூட்டுவது, வாங்கப்பட்ட பணம், செக் இவைகளை கழிப்பது, அளவுமீறி பணம் கேட்கப்பட்டால் அதை தெரியப்படுத்துவது இவ்வளவுடன் மட்டுமின்றி அன்றைய தின முடிவில் எவ்வளவு வரவு, எவ்வளவுபட்டுவாடா, பாக்கி எவ்வளவு இவ்வளவையும் இந்த இயந்திரம் செய்துவைக்கிறதாம்.

## பசி பொறுக்க முடியவில்லை திருடினேன்

கோர்ட்டில் ஒருவன் கூற்று

நாகை சிர்ந்தி கிராமத்தில் ஒரு மிராஸ்தாருக்கு உரிய நெல்லைத் திருடி விட்டதாகச் சாம்பான் என்பவன் கைதுசெய்யப்பட்டு ஓராண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். விசாரணையின்போது, தான் பல நாட்கள் பட்டினிகிடக்க நேரிட்டதென்றும், எங்கும் உணவு கிடைக்கவில்லையென்றும் அதனால் திருட வேண்டிய அவசியம் ஏற்பட்டதென்றும் கூறினான்.

## கனவால் மரணம்

லண்டன், டிச. 19—

ஒருபல் டாக்டரிடம் சிகிச்சை செய்துக் கொள்ளும் போது தொண்டையடைத்து இறந்து விட்டதாக ஒரு பெண் கனவு கண்டாள். உண்மையாகவே பல் வைத்தியரிடம் சிகிச்சை பெறும்போது அவர் உயிர் போய்விட்டது. கனவில் கண்டதை நினைத்துக் கொண்டே இருந்ததால் வாகஷ் நரம்பு பாதிக்கப்பட்டு இம் மரணம் சம்பவித்தது சாத்தியம் என்று வைத்திய நிபுணர் ஒருவர் பிரேத விசாரணையின் போது கூறினார்.

## பொதுமக்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றென்றால் அரசாங்கம்நடைபெறும் வகை எவ்வாறிருக்கிற தென்பது நன்கு விளங்குறதல்லவா? சாதாரணமாக கேள்வி ஒன்றுக்கு விடையளிக்க ரூ.60செலவாகிறதாம்கேள்விகளுக்கு விடையளிக்க எவ்வளவு செலவாகிறது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்க ரூ 2000 செலவாயிற்றும். கேள்விகள் கேட்கப்பட்டால், கேள்வி எந்த இலாகா தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த இலாகா உடனடியாக அதற்குரிய தகவல்களைத் திரட்டித் தரவேண்டுமல்லவா? அதற்குரிய ரிக்கார்டுகள் அந்தந்த இலாகாவில் இருக்க வேண்டுமல்லவா? இதற்காக விசேஷ ஆட்களை, செலவோ என் ஏற்படவேண்டும்? ஒரு காசும் செலவில்லாமல் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்க சாதாரணமாக ரூ. 60-ம் விசேஷமாக ரூ. 2000-மும் ஒருகேள்விக்குப்பதிலளிக்க ஏற்படுகிறதென்றால், இவ்வாறு பொதுப் பணம் செலவாகும் விந்தையை என்னென்றுதான் கூறுவது!

இதோடு வீண் செலவினம் நின்றுவிடவில்லை. வேலை இழந்த அகதிகளுக்கு மாத அலவன்சும் பென்ஷன் பெறத் தகுதி உள்ளவர்களுக்குப் பென்ஷனும், ஸ்தலஸ்தாபனங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்குப் பாதிப் பென்ஷனும் தருவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது.

இவ்வாறு பொதுப் பணம் உல்லாசமாகச் செலவிடப் பயன்படுகிறதே ஒழிய, நாட்டு நிலைமையை உயர்த்த, நாட்டு மக்களின் பொது நன்மையைக் கவனிக்கச் சிறிதேனும் கவலை கொள்ளப்படுகிறதா இந்த ஆளவந்தார்களால்!

# வீட்டு நெருக்கடியைப் போக்க

## பிரிட்டன் வழிகண்டு பிடித்துவிட்டது

லண்டன், டிச. 19—

விரைவில் வீடுகளை கட்டி முடிக்கும் வழி ஒன்றை பிரிட்டிஷ் கட்டட எஞ்ஜினியர்கள் நீண்ட கால ஆராய்ச்சியின் பலனாகக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இப்புது முறையினால் மிகத்துரிதமாக வீடுகளைக் கட்டி முடிக்கலாம் என்றும் இதனால் பிரிட்டனின் வீட்டு நெருக்கடி விரைவில் தீரும் என்றும் கூறப்படுகிறது. இப் புது முறைப்படி ஒரு கல் வைக்கும் நேரத்தில் 20 கற்களைவைக்க முடியுமாம்.

### ஒரு நாளில் இரு வீடுகள் கட்டலாம்!

பிரிட்டிஷ் கட்டட என்ஜினியர்கள் கண்டுபிடித்துள்ள புது முறையின்படி ஒரு நாளில் இரு வீடுகள் கட்டலாம் என்றும், 4 கொத்தனும் இரு தச்சனும் இந்த வேலைக்கு போதும் என்று கூறபடுகிறது. பெரும் அளவில் 'காண்ட்ரேக்ட்' எடுத்து வேலை செய்தால் இன்னும் செலவை குறைக்க முடியுமாம்.

## 'ரேஸர் பிளேடு' கட்டுப்பாடு எடுபட்டது.

சென்னை, டிச. 19—

"ரேஸர் பிளேடு" மீதிருந்த விலைக்கட்டுப்பாட்டை இந்திய சர்க்கார் எடுத்து விட்டனர்.

சென்ற செப்டம்பரில் பொருள்கள் விலை, சப்ளை அவசரச் சட்டத்தின்கீழ் சில ரக பிளேடுகளின் விலையை இந்திய சர்க்கார் கட்டுப்படுத்தியிருந்தனர், அந்த விலைக் கட்டுப்பாடு இப்போது எடுபட்டு விட்டது.

## இனி நடப்பவை

கொழும்பு:—24-12-50 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு, பெண்கள் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் தி-மு-கழகக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் ராசனி, தம்பிதுரை, குலசேகரன் மற்றும் பலர் பேசுவார்கள்.

* * *

சென்னை :-சோஷியல்யூத் சங்கத்தின் சார்பில் 20-12-50 புதன் மாலை 5-30க்கு'வகுப்புநீதி'பொதுக் கூட்டம் அமைந்தகரை லக்ஷிமி தியேட்டர் பின்புறம் தோழர் வி. முனுசாமி எம். சி. தலைமையில் தோழர்கள் எஸ். குருசாமி எம்.ஏ. (ஆசிரியர் விடுதலை) என். ஜீவரத்னம் எம் சி., எம். ராதாகிஷ்ண பிள்ளை பி. ஏ. பி. எல். (முன்னாள் மேயர்) எஸ். எஸ். மாரிசாமி (ஆசிரியர் "காண்டீபம்) எம். கன்னியப்பன் எம். எல். ஏ. மற்றும் பலர் பேசுவார்கள்.

## 2 வயது குழந்தைக்கு 3 பாஷைகள் தெரியும்!

லண்டன், டிச. 19—

பிராட்போர்டில் 2 வயதுள்ள எல்லென்ரோஸ்என்ற குழந்தைக்கு மூன்று பாஷைகள் — ஜெர்மன், போலிஷ், இங்கலீஷ்-நன்கு பேசத் தெரிகிறதாம்.

இக் குழந்தையின் தாயாருக்கு ஜெர்மன் பாஷை மட்டும்தான் தெரியும். இக்குழந்தை தன் தாயாருக்கு இங்லீஷ் பாஷையை சொல்லித் தருகிறது.

எல்லென்ரோஸ் ஆங்கிலத்தை தன் தகப்பனாரிடமிருந்து தான் கற்றாள்.

## போர்மோஸாவை ஆக்கிரமிக்க அமெரிக்கா முயற்சி

ரஷ்யாவின் குற்றச்சாட்டு

பிளஷிங்மெடோஸ், டிச. 9—

ஐ. நா. அரசியல் கமிட்டி மீண்டும் கூடும்போது போர்மோஸாவை ஆக்கிரமிக்க அமெரிக்கா முயல்கிறது என்ற குற்றச்சாட்டை ரஷ்யா விவாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தலாம் எனத் தெரிகிறது.

ஆனால் பிரசார பிரசங்கங்களுக்கெல்லாம் இடம் கொடுக்கப்படமாட்டாதென இங்கு கூறப்படுகிறது.

ஐ. நா அஸெம்பிளி இன்னும் ஒத்திவைக்கப்படவில்லை.

தோழர் பி. என். ராவும் மற்றிருவர்களும் கொண்ட ஐ. நா கமிஷன் கொரியாவில் யுத்த நிறுத்தம் ஏற்படச் செய்ய வழிகளை ஆராய்ந்து வருகிறது.

## வைஜயந்திமாலா மேனாட்டுப் பயணம்

சென்னை, டிச. 19—

குமாரி வைஜயந்திமாலா அடுத்த ஆண்டுக் கடைசியில்மேனாடுகளுக்கு விஜயம் செய்து நடனக் கச்சேரி செய்ய எண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் தவிர, பிரான்ஸ், இதாலி, பெல்ஜியம், ஸ்விட்ஸர்லாந்து முதலிய ஐரோப்பியநாடுகளுக்கும் செல்லத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

பரதநாட்டியம், இதர நடனவகைகள் முதலியவற்றுடன் இந்து புராண நடன நாடகங்கள் முதலியவைகளை மேனாட்டினர் முன் அடிக்காட்ட அவர் உத்தேசித்திருக்கிறாராம்.

நடனக்கலையை கற்றுக்கொடுக்க சென்னையில் இவர் சங்கீதப்பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பித்து நடத்தவிருக்கிறார்.

## கழக நடவடிக்கைகள்

சென்னை (குயப்பேட்டை):— 3-12-50 ல் க. வரதன் தலைமையில் செயற்குழு கூடி தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள். செயலாளர் சோ. க. முருகேசன்; துணைச் செயலாளர் சி. பாலசுப்பிரமணியன்; விளம்பர உறுப்பினர் க. குப்புசாமி; பொருளாளர் வ. கிருஷ்ணசாமி. மாவட்ட கழக உறுப்பினர்கள் ம. கணேசன், க. கோவிந்தன். செயற் குழுவினர்கள் சந்தகுமார், காசிநாதன், க. ந. ஜெகதீசன், எ. பாலன், சி கோதண்டன். தோழர் கணபதி வந்தனோபசாரம்கூற, கூட்டம் இனிது முடிந்தது.

* * *

தேனீ:—திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக் கூட்டம் 13-12-50 ல் தோழர் நடராசன் தலைமையில் கூடியது. அதுபோது இரண்டாம் ஆண்டு புது நிர்வாகஸ்தர்கள் கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் சோ. பழனிச்சாமி; துணைச் செயலாளர் சு. தேவராசன்; பொருளாளர் டி. டி. நடராசன்; விளம்பர உறுப்பினர்கள் சு. கருப்பையா, ம. துரைசாமி. மதுரை மாவட்ட உறுப்பினர் கோ. ப. ப. மு. நாராயணசாமி. செயற் குழுவினர் கா. சிவசாமி, நாதன், அய்யப்பன், வேணுகோபால், மா. மு. துரைப்பாண்டியன், வெள்ளைச்சாமி, மாடசாமி, எ. துரைராஜ்.

பின் ஆண்டு விழா கொண்டாடுவதற்கு மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, விருதை ராமசாமி இவர்களை அழைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. உடனடியாக 3-1-51 திங்கள் புதன் மதுரை முத்து, தங்கப்பழம், சிவசாமி இவர்களை அழைத்து பொதுக் கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

* * *

கீழ்வழித்துணையாங்குப்பம்:— 15 12 '50 காலை "பகுத்தறிவுப் பாசறை" என்னும் பெயரில் வாசகசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதுகாலை, என். நடராசன் தலைமையில் அங்கத்தினர் அனைவருங்கூடி, என். நடராசன் அவர்களை செயலாளராகவும், கோ. வீரவசந்தலுவை துணைச்செயலாளராகவும், கே. காளியப்பனை நிதி உறுப்பினராகவும், வே. மு. தானப்பன், செ. சண்முகம், கு. கன்னியப்பன் இவர்களை விளம்பர உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிதி நிலைமையை உத்தேசித்து பிறகு இவ்வமைப்பை திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பெற்றது.

* * *

இலக்குவனுய்க்கன்பட்டி (கோவை மாவட்டம்): 14-12-50-ல் தோழர் கே. பி. மாணிக்கம் தலைமையில், தி. மு. கழக நோக்கங்களையும், அதன் முக்கிய வேலைகளைப் பற்றியும் தோழர்கள் எல். பி. சீதாராமனும், சி. எஸ். அர்த்தநாரியும் பேசினர். தோழர் எஸ். எ. ராசகோபாலின் திராவிடப் பண்ணுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## அமெரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதி

அமெரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதியும் பல வருஷங்களுக்குப்பின் இப்போது சமநிலைமையை அடைந்திருக்கிறது.

அயல் நாடுகளிருந்து வரும் இறக்குமதிகள் அதிகரித்திருப்பதால் சங்க அதிகாரிகளால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை.

## திருக்குளப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் பாழடைந்து வருகின்றனவோ அக்கிராமமக்கள் இன்றே செய்ய வேண்டியது அவ்வூர் கோயில் திருக்குளத்தைச் சீர்திருத்த வேண்டியதுதான். ஏரிகள் தானாகவே தண்ணீரை நிரப்பிக்கொள்ளும். மதி மந்திரியார் மக்களுக்குச் சொல்கிறார். மயிலை சித்திரக் குளத்தைப் பழுது பார்க்கும் வேலையை ஆரம்பித்து வைத்த முகத்தான். நாம் சக்தியிழந்தவர்கள். 'நம்முடைய மூதாதையர்கள் அவர்களுக்கிருந்த பக்தியினால் அபார சக்தி பெற்றிருந்தனர். அன்று அதனாலன்றோ திருக்கோயில்களும் அதற்கடுத்து திருக்குளங்களும் வெட்டப்பட்டன. நம்மிடத்திலே பக்தி குன்றிவிட்டது. திருக்குளங்கள் பாழடைந்துவிட்டன, "இவ் வேலையை திரும்பச் செய்யும் உங்கள் சர்க்காரிலே எங்களுக்களித்த பொறுப்பை திறம்பட நடத்திக் காட்டுகிறோம்" என்கிறார். மேனாடுகளிலே மராமத்து மந்திரிகளின் அரிய பெரிய சாதனைகளினால் அமைந்துள்ள பாலங்களைக் காணுங்கள். நீர்ப்பாசன திட்டத்தைத் திறம்பட செய்தவர்களையும் காணுங்கள். இங்கே திருக்குளங்களை மராமத்து செய்யும் மந்திரியையும் காணுங்கள் இவைகள் நாட்டிலே ஏற்பட்டுள்ள அறிவுப் பஞ்சத்தைக் காட்டுகிறது எத்தனை ஆண்டுகள் இந்த அறியாமை கடலை கடக்க நேரிடுமோ. மயிலை சித்திரக் குளத்தை பழுதுபார்க்க 75,900 ரூபாய் பிடிக்கும். இது திருக்குளப் பணிசெய்யும் திருவாளரின் திட்டம். இத்திருக்குளம் பழுதுபார்க்கும் இடத்திலே குடிக்கும் தண்ணீருக்கு வசதிசெய்து இருக்காது சென்னை நகரசபை! ஆங்கோர் அறிவுச்சாலை ஆரம்பிக்கும் நினைவுகூட இருக்காது. இவைகளெல்லாம் திருவாளர் கண்களுக்குத் தோற்றமளித்திராது. திருவாளர்கள் திருஉள்ளத்திலே கூட இடம் பெறாது. இவைகள் கடவுளின் திருப்பணியல்லவே. கடவுளின் திருப்பணி புரிபவர்கள் கைலாய பதவி அடைவர் என்பது ஆரியர் அளித்த இந்துமதக் கட்டளையை கண்மூடி பின்பற்றிய மூதாதையர்கள் போக்காயிற்றே! அதனால் நாடு நலிவு பெறாது இந்நிலையிலுள்ளோமே என்று மனம் மகிழ்ந்து மூத்தோர் வழியை முறையுடன் பின்பற்றச் சொல்கிறார் மதி மந்திரியார்.

இந்தப் போக்கு மக்களின் தெளிவடையா நிலையைத்தான் காட்டுகிறது. பிறகுதானே மந்திரிகளும் தெளிவடைந்தவர்களாக வருவர்!

### அறிவிப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி.மு க. மாநாட்டில் பணியாற்ற விரும்பும் தொண்டர்களும், ஏற்கனவே பெயர் பதிவுசெய்து கொண்டுள்ள தோழர்களும் 21-12-50 காலை 9 மணிக்கு பெரிய காஞ்சிபுரம் 45-பிராசவீதியிலுள்ள மாநாட்டு அலுவலகத்தில் கூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

கே. டி. எஸ். மணி
சி. பஞ்சாட்சரம்
தொ. ப. தலைவர்கள்

பொங்கலன்று வெளிவருகிறது!

# "புராக்கிரஸ்" (ஆங்கில வார இதழ்)

எல்லா ஊர்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

தனிப் பிரதி அணா. 2. வருட சந்தா ரூ. 6.

"புராக்கிரஸ்" அலுவலகம்

மண்ணடி :: சென்னை-1.

## தி. பே. மு. கழகம்

செயற்குழுக் கூட்டம்

17-12-50ல் ஞாயிறு பிற்பகல் இரண்டு மணிக்கு சென்னை சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரி தெரு 13 எண் தோழியர் அலமேலு அப்பாத்துரை அவர்கள் இல்லத்தில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

23 செயல் உறுப்பினர்கள் வந்திருந்தனர். திருமதி. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி செயலாளர். அலர்மேலு அம்மையார் அவர்கள் விளக்கமாக பேசினார்கள். உறுப்பினர்கள் சேர்ப்பதைப் பற்றியும், துவக்கவிழா நடத்துவதைப் பற்றியும், தலைவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். பின்பு தோழியர் மூவலூர். இராமாமிர்தத் தம்மையார் கழகத்தின் ஆக்கவேலைகள் குறித்து பேசினார்கள். கடைசியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

7-1-51-ல் கழகத்தின் துவக்க விழாவினை சென்னையில் நடத்துவதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது. தோழியர் ஏ, கே, டி. ஆதிலக்குமி அம்மையார் அவர்களை விழாவிற்கு தலைமை வகிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறது. அன்னை ஈ. வே. ரா. நாகம்மையார் படத்தை தொடக்க விழாவில் திறப்பதென்றும், அத்திறப்புவிழாவினை நடத்திக்கொடுக்க தோழியர் ஜோதீஸ்வரி அம்மையார் அவர்களை இக்கமிட்டித் தேர்ந்தெடுக்கின்றது.

### அறிவிப்பு

'அழகிரி இளைஞர் மன்ற' மென புதியதொரு படிப்பகம் சென்னை மைலாபூரைச் சேர்ந்த ராபின்சன் பேட்டையில் நிறுவ எண்ணங்கொண்டு 20-12-50ல் ராபின்சன் பேட்டை, கந்தசாமி தோட்டத்தில் இதைப்பற்றிப் பேசி நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்க இருப்பதால் தயவு செய்து அன்பர்கள் இதை அழைப்பாகக்கொண்டு தோழர்களை வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

ஈரோடு
மாயவரம்
வேலூர்
திருவண்ணாமலை

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி சென்னை—1.

## நாடகக் கழகம்

இரண்டாவது நாடக விழா

20-12-50 முதல் 17-1-51 வரை

N. K. திருமலாச்சாரியார் கலாமண்டபம் (திருவல்லிக்கேணி நேஷனல் உயர்நிலைப்பள்ளி) மாலை 6 மணிக்கு மகத்தான திறப்பு விழா.

T.K.S. சகோதரர்கள்-ஔவையார்

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு இரவு 10-30 மணிக்கு

மண்டோதரி

(செக்ரட்ரேட்டி பார்ட்டியாரால்)

சீசன் கட்டணம்: முதல் வகுப்பு ரூ. 40, இரண்டாம் வகுப்பு ரூ. 20.

தினக் கட்டணம்: முதல் வகுப்பு நாற்காலி ரூ. 2, இரண்டாம் வகுப்பு ரூ. 1, மூன்றும் வகுப்பு அணா 8.

## திருவத்திபுரம்

பொங்கல் விழா ஐந்தாம் ஆண்டு

ஆண்டுதோறும், இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் நடத்தப்பெறும் "பொங்கல் விழா" இவ்வாண்டும், மிகச் சிறிய முறையில் நடைபெற வேண்டிய ஏற்பாடுகளுடன் செயல் முறை துவக்கப்பட்டு விட்டது..

விழாவிற்கு நம் கழக முன்னணி பேச்சாளர்களும், தோழர்களும் அழைக்க வேண்டிய ஏற்பாடுகள் ஆகிவிட்டன,

விழா நாட்களில் ஒரு நாள் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் (குழுவினருடன் கூடிய) நாடகம் நடைபெறவும் ஏற்பாடாகிறது.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| 1. ஆண்டு | ரூ. | 12—8—0 |
| 6. திங்கள் | ரூ. | 7—0—0 |
| 3. திங்கள் | ரூ. | 3—8—0 |

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-1